ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

ஜாக்கிரதையாயிருக்கவேண்டுமென்று சாஸ்திரத்திற் கூறியவண்ணம் அனுஷ்டிக்கும் ஓர் வைதிகர் விடியற்காலத்தில் விழித்துக்கொண்டுசுத்தி செய்து ஆசமனம் செய்துவிட்டு பரமேசுவரனை ஏகாக்ரமனத்தால் தியானஞ்செய்கின்றார், அதைக்கண்டுஅடுத்தவீட்டுக்காரன்லௌகிகன்ஒருவன் கேட்கிறான். வைதிகரே எந்தக்குடி கெடுக்க யோஜனை செய்கின்றீர்.

வைதிகர்:— வைதிகர்கள் செய்கின்ற ஒரு யோஜனையாவது எதையும் கெடுக்காது.

லௌகிகன்:— (கோபத்தோடு) அப்படியா! மஹானுபாவாள் தாங்களெல்லோரும் சுயநலத்தைக் கருதி கூட்டங்கூடிச் செய்த யோஜனைதான் மானிடப்பிறவியை எடுத்துங்கூட சில வகுப்பாரைப் பொதுவான ஸ்தலங்களிலும் தலை நீட்ட முடியாமல் தாழ்த்திவிட்டிருக்கின்றதே! அது போதாதா? இதைவிட வேறு கேடும் விளைவிக்க இருக்கின்றதா?

வைதிகர்:— ஐயா! கோபங்கொள்ளாதீர்கள், இப்படி நேர நாங்களா ஆலோசித்து முடித்தோம்?

லௌகின்:— நீங்களில்லை. உங்கள் கூடஸ்தர்கள் செய்த வேலை இது. அதில் உங்களுக்கும் பாத்தியம் உண்டு.

வைதிகர்:— எங்களுடைய கூடஸ்தர்கள் தானல்லவா தங்களுடைய கூடஸ்தர்களும். அல்லது வேறு?

லௌகிகன்:— இல்லை! இல்லை!! எல்லாப்பாபிகளும் ஒருவர் தான்.

வைதிகர்:— (காதைப்பொத்திக்கொண்டு) பாபம் சாந்தமாகுக. இதென்ன ஐயா இப்படி! என்னை தூஷிக்கஆரம்பித்தவர் உங்கள்பெரியவாளைப் பற்றியே தூஷிக்கஆரம்பித்துவிட்டீரே! உமக்கு உங்கள் பெரியோர்களே தூஷிக்கத் தக்கவர்களாய்விட்டால் சிறிதுகாலம் கழிக்கும்போது, இப்பொழுது எவர் கக்ஷியைச் சார்ந்து பெரியோரையும் தூஷிக்கத் தலை எடுத்தீரோ அவரை எளிதில் விட்டுவிடுவீரோ? வைதிகர்களை தூஷித்து விட்டால் கைகண்ட பலனாய்க் காசு கிடைத்துவிடுகின்றது. அதற்குத் தன் நிலைமை கூடப்புரியாமல் பேசும்படியாய் விட்டது. நீர்மேல் குமுழி போல் கண்டதுமழியக் கூடிய காசுக்காகப் பாபத்தையும் பாராட்டாமல் பாடுபடும் உம்மைப்போல் உள்ளவர்கள் சுயநலத்தைப் பாராட்டியவர்களேயல்ல. உங்கள் கூடஸ்தர்கள் தான் சுயநலத்தைப் பாராட்டிப் பிறரை கெடுத்தவர்கள். வாஸ்தவந்தான். உம்மையும், என்னையும் சொல்லக் குற்றமில்லை. கலிமஹாராஜன் படுத்துகிரபாடு. நீர் பெரியோர்களை வாய் கூசாது தூஷிக்கவும், கையாலாகாதவன்மாதிரி நான் அதைக் கேட்டுக் கொண்டிருக்கவும் இன்று காலையில் நேர்ந்ததே! ஈசுவர தியானமும் கலைந்து விட்டது. போதும் போதும். நல்ல காலமாயிருக்கின்றது! ஈசுவரனைப் பிரார்த்தித்துக்கொண்டு தீங்குவழி செல்லாமல் நல்வழி நாடி சுகமாயிரும்.

சுபம்!

பத்திராதிபர்,

ஆர்ய தர்மம்.

விபவ-ஸூ பங்குனி-மீ கஉ

தர்மோபதேசத்திற்கு அதிகாரி யார்?

ஆர்யச்சிறுவர்களுக்கு தர்மோபதேசம்செய்ய அதிகாரம் பெற்றவர் யார் என்ற கேள்விக்கு ஸமாதானம் ஸுலபமாய்த் தெரிந்துகொள்ளலாம். எப்படியெனில் ஒரு விஷயத்தையுபதேசிக்க, அதை நன்றாகத்தெரிந்துகொண்டு வழக்கமாக அனுஷ்டித்துவருபவனே அதிகாரியாவதுபோல் தர்மத்தை அதன் பிரமாணவாயிலாக ஆசார்யமுகமாகத் தெரிந்துகொண்டு ஐயம்திரிபற விசாரித்து நிச்சயமாய் கலக்கமின்றி அனுஷ்டித்துவருபவர்களே தர்மோபதேசம்செய்ய அதிகாரிகளாவார்கள். ஒரு விஷயத்தை நன்றாகத் தெரிந்துகொள்ளாமலும், செய்து காட்டக்கூடிய காரியமானால் அதைச்செய்து பழக்கிக்கொள்ளாமலும், அதை உபதேசிக்கமுடியாது. ஒரு காரியத்தை ஒருவர் சொல்லக் கேட்டுவிடலாம், அதைச் செய்யவாரம்பித்தால் அனேக ஸந்தேஹங்கள் உண்டாய்விடும். உதாரணமாக வைத்திய நூலைப்படித்து அதன் பொருளைத் தெரிந்து கொண்டாலும் ஒருலேகியம செய்ய வேண்டுமானால் அதை ஒருவன் செய்துகாட்டிப் பலதடவைப் பார்த்துப் பழக்கிக்கொண்டவனுக்குத் தான் அதைத் தவறுதலன்றி செய்ய முடியும். செய்து விட்டாலும் அந்த லேகியம் இன்னபயனைச் செய்யுமென்று வியாதிஸ்தர்களுக்கு பல தடவை கொடுத்துப்பார்த்துத்தான் அது இன்ன வியாதியைப்போக்கும், இன்ன குணத்தைச்செய்யும் என்று நீண்டகாலத்துப்பழக்கத்தாற்றான் தெரிந்துகொள்ளக்கூடியது. இதுபோலவே தர்மவிஷயத்திலும் முதலாக ஆசாரியன்முகமாக தர்மத்தைப் பிரமாணபூர்வகமாய்த் தெரிந்துகொண்டு அதையனுஷ்டிப்பவர்கள் பல தடவை பழக்கிக்கொடுக்க அப்பொழுதுதான் அனுஷ்டிக்கமுடியும். ஒருவாறு அனுஷ்டித்துவிட்டாலும் அதன் பயனைப் பல

பேர்கள் அனுபவித்ததைக்கண்டவன்தான் கண்டுபிடிக்கமுடியும். அப்படிக் கண்டுபிடித்தவர்களாக நாமெல்லாம் ஆகமாட்டோம் என்பது எல்லோர்களுக்கும் ஆத்மஸாக்ஷிகமான அனுபவம். அது ஒரு பிராணியின் அனேக ஜன்மங்களில் செய்யப்பட்ட கர்மங்களையும் அதன் பயனை அதே ஜன்மத்திலோ ஜன்மாந்தரத்திலோ அவர்கள் அனுபவிப்பதையும் கண்டவனுக்குத்தான் புலப்படும். ஒரு மருந்தின் குணம் பலபேர்களிடம் கண்டவனுக்குத்தானே புலப்படும். ஆகவே மூன்றுகாலங்களிலேயும் நடப்பதைக் கண்டறியும் ஞானிகளுக்குத்தான் தர்மங்களின் பயன் பிரத்தியக்ஷமாகத்தெரியும். அப்படியிருக்கும்போது தற்காலத்தில் தர்மமென்றால் இன்னதென்றும் அது எப்படி அனுஷ்டிக்கவேண்டியதென்றும் என்ன பயனைத்தரும் என்றும் தெரிந்துகொள்ளாதவர்களும் ஜன்மபரம்பரையாக தர்மகாரியங்கள் அனுஷ்டிக்கப்பட்டு வருவதைக் கனவிலும் காணுதவர்களும் தர்மகாரியங்களை வேணுமென்று கெடுப்பதற்காகக் கங்கணங்கட்டிப் புறப்பட்டவர்களும் தர்மமின்னது என்று சொல்லுகிறதாம். காசு நிரம்ப ஸம்பாதிக்கும் பேபர்கள் பலவற்றிலுமிதைப் பிரசுரித்துவிடுகிறதாம். அது வேதவாக்குப்போல் தர்மப்பிரமாணமாம். என்ன காலவித்தியாஸம்! வேதமூலமாகத்தான் தர்மம் வெளிப்படவேணுமென்றும் அதன் பயனை பரமேசுவானும் பரமேசுவானது பிரஸாதம்பெற்று அவர்போல புகழப்படும் புண்ணியாத்துமாக்களான நமது முன்னேர்களுந்தான் கண்டறிந்தவர்கள் என்ற ஸம்பிரதாயமெல்லாம் மறைந்துவிட்டது. எங்கேயாவது கிராமாந்தரங்களில் வஸித்துக்கொண்டு பண்டையவழக்கங்களை ஒருவர் சொல்வாரேயானல் அவர் வைதிகரென்று பலவிதமாக தூஷிக்கப்படுகின்றார். இதனால் நூதனநாகரீகங்கற்றவர் வைதிகரென்பது இகழ்ச்சியான சொல்லெனக் கருதுகின்றனர். அது "அபிதே ஆபஸ்தம்பி" என்ற கதைமாதிரியிருக்கின்றது. அதாவது ஒரு ராஜகிரஹத்தில் நித்தியதானம் கொடுப்பதற்காக மந்திரியால் அனுப்பப்பட்டவர், தானதிகாரிக்குப் பிரியப்படாதவராயிருக்க அவர்மீது எவ்வித தோஷமும் சொல்லமுடியாமலிருக்கவே ஏதாவது ஒன்றைச் சொல்லி இந்த மூடப்பிரபுவைப் போதிக்கவேணுமென்று அந்த தானதாரி "எல்லாம் ஸரிதான், அபிதே ஆபஸ்தம்பி" என்று போதனைசெய்தாராம். அதைக்கேட்ட அந்த மூடனும் ஆபஸ்

தம்பியென்றால் ஏதோ தோஷமுள்ளவர்போலிருக்கிறது என்று வேறு ஒருவரைக்கொண்டுவாருமென்று சொல்லவே தானதிகாரி தனக்கு வேண்டியவனுக்கு தானம் வாங்கிக்கொடுத்த கதையா யிருக்கின்றது இது. வைதிகர் என்றால் வேதத்தை நன்றாய்க் கற்று அதன் பொருளாகிய தர்மத்தையனுஷ்டிப்பவர் என்று பொருள். அவர் சொல்வதெல்லாம் தர்மமில்லையாம், வேதத் திலும் அதைப்பின்பற்றிய ஸ்மிருதிகளிலும் பாலிகாவிவாஹம் தர்மமென்றும் மற்ற விவாஹங்கள் தர்மமல்லவென்றும் இன்னு ரின்னார் இன்னின்ன நிலைமையிலிருப்பது தர்மம், மாறுபடுவது அதர்மம் என்றும் கூறப்படுவதைத்தான் வைதிகரும் கூறுகின் றார், இது தவறுதலாம். எத்தேசத்தவரோ, எத்தன்மையுடைய வரோ யாராவது ஒருவர் வந்து "அவர் வைதிகர் அதனால் அவர் சொல்வது ஸரியல்ல"வென்று சொல்லிவிட்டால் அது ஸரியா யுள்ளதாம். வேதங்கற்றவர் சொல்லும் வேதார்த்தம் ஸரியல்ல வாம். வேதமென்றால் இன்னதென்றே தெரியாதவர் சொல்வது ஸரியாம். இதென்ன விபரீதக்ஞானம்? பாலிகாவிவாஹம் செய் தால் அதில் சில தோஷங்களைக் காட்டுகின்றார்கள். அந்த தோஷம் பால்யவிவாஹத்தாற்றான் வந்தது என்று எப்படி நிரு பிக்கமுடியும்? வேறு காரணங்களாலும் அந்த தோஷங்கள் ஸம் பவிக்கலாமல்லவா? ஸ்திரீயாகப்பிறந்த பிராணிக்கு அதிலும் மனுஷ்யஜாதிக்கு அவசியம் புருஷயோகம் வேணுமென்று சாஸ் திரமபிப்பிராயப்படுகின்றது. அதில் அந்த ஸ்திரீக்கு வைதவ்ய யோகம் உண்டா இல்லையா என்பதைத் தெரிந்துகொள்ளுவதற் காகவே வேதாங்கமான சோதிடசாஸ்திரத்தில் ஜாதகஸ்கந்தத் தைச் சேர்த்திருக்கிறார்கள். அதனால் ஒரு ஸ்திரீயின் ஜாதக பலனைப் பார்க்கும்போது வைதவ்யயோகமேயில்லாமல் தீர்க்க ஸுமங்கலியாகவே இருக்கும்படியான யோகமிருக்குமானால் அந்தப்பெண்ணுக்கு பால்யவிவாஹம் நடத்திவிட்டால் வைதவ்ய யோகம் வந்துவிடுமா? வைதவ்யயோகமுள்ள ஜாதகமாயிருந்தால் அப்பொழுது என்ன செய்கின்றது என்றால் அது பால்யவிவா ஹம் செய்யாமல் ப்ரௌடாவிவாஹம் செய்தால் நீங்கிவிடுமா? அதற்கென்ன பிரமாணம்? தற்காலத்தில் குருட்டுத்தனமாய்ச் சொல்லும் கட்டுரைகள் பிரமாணமாகமாட்டாது. இதற்கு வைதி கர் சொல்வதுதான் பிரமாணமாகும். அதனால் வைதிகர்களை

வீணாக தூஷித்து பாபத்தைச் சுமக்காதீர்கள், அவர்களும் உங்களைப்போல் உலகநன்மையை நாடுகிறவர்கள்தான், நீங்கள்மாத்திரம் உலகநன்மையை நாடுகிறவர்கள், வைதிகர் உலகத்தைக் கெடுக்கின்றவர் என்ற அபிப்பிராயத்திற்கு வைதிகர்மீதுள்ள அஸூயையே காரணம். வீணில் அஸூயைப்படாமல் நல்லதை நாடுவீர்களாக. சுபம். ப—ர்.

ஆசார்யஹேமசந்திரனும் ஸ்ரீ சங்கராசார்யரும்.

கூர்ஜரதேசத்தில் அனஹில்லபுரம் என்னும் முக்கிய பட்டினத்தில் சாளுக்கியபாரம்பரையில் திரிபுவனபாலனின் குமாரன் குமாரபாலன் என்னும் அரசன் அத்தேசத்தை ஆண்டுவந்தான். இவனுடைய முன்னோர்கள் மிக்க சிவபக்தர்களாயிருப்பினும் இவனுக்கு வைதிகமதப்பற்றில்லை. இவன் தண்டுகமென்னுமூரில் கச்சிகசிரேஷ்டிக்கு A. D. 1088-ல் பிள்ளையாகப்பிறந்த ஹேமசந்திரஸூரி என்பவரைத் தன்னருமையாசிரியாராகக் கொண்டான். அந்த ஹேமசந்திரர் நல்ல சைவகுலத்துதித்தவர். இவருக்குத் தந்தை இட்டபெயர் சங்கதேவன் என்பதே, இவர் தேவசந்திரர் என்பவரால் ஜைனராக மாற்றப்பட்டு ஸோமசந்திரர் என்று பெயரிடப்பட்டார். சிறிதுகாலத்தில் இவருடைய புத்தி ஸாமர்த்தியத்தையும் ஸர்வசாஸ்திரதேர்ச்சியையும் கண்ணுற்ற ஆசானால் இவருக்கு ஆசார்யஹேமசநதிரரென்று பெயரும் அளிக்கப்பட்டது.

இவ்வாசார்யஹேமசந்திரரின் ஆணைக்கிணங்கி ஜைனமதத்தில் மாறுப்பற்றுடையவனாகிய குமாரபாலன் 'ஜீவதயை' என்னும் ஜைனதர்மத்தை முக்கியமாகக்கொண்டான். பிராமணர்கள் யாகம்முதலியன செய்யக்கூடாதென்றும் ஜைனமதத்தையே தழுவவேணுமென்றும் ஆணையிட்டான். ஜைனமதத்தை உலகிற் பரவச்செய்யத்தலைப்பட்டான். ஓரரசனை இவ்வாறு மாற்றிய ஹேமசந்திரரின் ஸாமர்த்தியத்தை ஸோமப்ரபா என்பவர் 'குமாரபாலப்ரதிபோதம் என்னும் நூலில் 5-வது பிரஸ்தாவத்தில்

स्तुमस्त्रिसन्ध्यं प्रभुहेमसूरे रनन्यतुल्यामुपदेशशक्तिम् ।
अतीन्द्रियज्ञानविवर्जितोऽपि यः क्षोणिभर्तुर्व्यधित प्रबोधम् ॥

सत्वानुकम्पा न महीभुजां स्यादित्येष क्लृप्तो वितथः प्रवादः ।
जिनेन्द्रधर्मं प्रतिपद्य येन श्लाघ्यः स केषां न कुमारपालः ॥

'புலனுக்கெட்டாதவைகளை உணரும் வல்லமையற்ற அரசனுக்கும் மெய்ஞானமளித்தருளிய வேற்றிடத்திற்காணவறிய ஹேமசந்திரஸூரியினுபதேசவன்மையைமுச்சந்தியிலும்துதிப்போமாக.

அரசருக்கிரக்கமில்லை என்றல்லவா உலகில் வழங்குகிறது. ஜீவதயை என்ற ஜைனதர்மத்தைக் கைக்கொண்ட குமாரபாலனை வழுத்தாதவர் யார்? என்றும் கூறியுள்ளார்.

"விப்ரக்ஷயம், பிராமணர் மடிய" என்னும் திருமந்திரத்தை உருப்போடும் ஜயினர்களிடையில் அகப்பட்டுக்கொண்ட பிராமணர்கள் என்னசெய்வார்கள்? தங்கள் நிலையை நினைத்து மனமுருகினர்கள். அரசனோ வேதபுத்தகங்களை தன் கண்முன் தீயிட்டு ஜைனமதத்தைத்தழுவவேண்டுமென்றல்லவா பிராமணர்களுக்காணையிட்டிருக்கிறன். அவ்வரசனாணையை மீறிநடக்க யாராலாகும்?

இவ்வாறிருக்கையில் திக்விஜயம் செய்தவரும் நம் பரமாசார்யாள் ஸமீபத்திலோர் ஊரில் வந்திருப்பதாயும், அவர் ஆங்காங்கு வைதிகமதங்களை நிலைநாட்டிக்கொண்டும் வேதபாஹ்யமானவைகளை வேருடன் களைந்துகொண்டும் வருவதாயும் அவர்கள் கேழ்வியுற்றனர். இச்செய்தி செவிக்கெட்டிய பிராமணர்களனைவரும் மனமகிழ்ந்து மறுதினமே ஆசார்யரிருப்பிடமடைந்து தங்கள் துன்பநிலையைக்கூறித் தங்கள் பட்டினத்திற்கு விஜயம்செய்யுமாறு வேண்டினர். அருளேயுருவாயமைந்த பரமாசார்யரும் அன்றே அங்கு சென்றனர்.

அரசன் ஹேமாசார்யரின் சொற்படி பரமாசார்யரைத் தன் ஆஸ்தானத்தில் வரவேர்த்தான். எல்லாக்கலைகளிலும் வல்ல ஹேமாசார்யர் நம் பரமாசார்யரைப்பற்றி நன்குணர்ந்தார். தனக்கும் தன் மதத்திற்கும் அழிவுகாலமிதுவே எனத் தீர்மானமாய்த் தன்மனத்துள்ளுணர்ந்தார். சந்திரனைக்கண்ட தாமரைபோல் ஹேமாசார்யரின் முகமலர்ச்சி குன்றியது.

அப்பொழுது அரசன் ஜகத்குருவை நோக்கி 'நீர் யார்? இங்குவந்த காரணமென்ன'வெனவினவ, ஆச்சார்யர் 'ஏ அரசனே! உனக்கும், உன் ஆசனுக்கும், உன் இராஜ்ஜியத்திற்கும் அழிவு

காலம் நெருங்கியதென்பதை உணரச்செய்யவே வந்தேன். அதாவது நாளைக்காலையில் மேல்ஸமுத்திரம் பொங்கிவந்து உன் இராஜ்ஜியத்தைமுழுவதும் அழிக்கப்போகிறது. அப்பொழுது அத்தண்ணீரில் மிதந்துவரும் ஓர் ஓடத்திலேறினால்மாத்திரம் நீ பிழைக்கலாம்' எனக்கூறினர். இதுகேட்டவாசன் தன்னுசானே யிதனுண்மையை வினவவரும் மதிமயங்கியஃதவ்வாறேயென வுரைத்தனர்.

மறுதினம் காலையில் அரசன், ஹேமாசார்யர், சங்கரர் மூவரும் மேல்மாடியில் நின்று கவனித்துக்கொண்டிருந்தனர். ஸமுத்திரத்தின் பேரொலி கேட்டது, சிறிதுநேரத்தில் ஸமுத்திரம் பொங்கிவருவதையும் தன்னுடுமுழுவதும் நீரில் முழ்கிப்போவதையும் அரசன் பார்த்துத் திகைத்தான். இன்னும் கொஞ்சநேரத்தில் மேல்மாடியை நெருங்கியது. அப்பொழுது ஓரோடமும் தன்னுப்பரிக்கையினருகே மிதந்துவரக்கண்டான், உடனே ஹேமாசாரியர் அதில் தாவிவிட்டார். அரசன் தாவயத்தனிக்கையில் நம் பரமாசார்யர் கையைப்பிடித்துக்கொண்டனர். உடனே அரசன் சுற்றும் பார்க்க வெள்ளத்தையும் காணோம், ஓடத்தையும் காணோம் ஹேமாசார்யரையும் காணோம், மனம் கலங்கினுன், திகைத்தான், இஃதுநினைவோகனவோ இந்திரஜாலமோவெனயோசிக்கலானுன்.

அந்நிலையில் கருணாமூர்த்தியான நமதாசார்யர் 'ஏ அரசே! இதுவரை நீ தெய்வமாய் பாவித்த உனது ஆசார்யன் கூறியது எவ்வளவு உண்மை பார்த்தயா? இதுபோன்றதே அவர் உனக்கு போதித்தமதமும் அவர் கூறிய மதம்முழுவதும் பிறட்டு. வேதமுறைப்படியேயுண்மை, அம்மெய்ப்பொருளுணர்த்தவே யானிங்கு வந்தனன். என்னுலல்லவா நீஉயிர்பிழைத்தாய், பொய்யான மதத்தைப் பரவச்செய்தவரின் கதியைப்பார் என்று கீழே பார்க்கச்செய்தார். ஹேமாசார்யர் மாடியினின்றும் தெருவீதியில் வீழ்ந்து தலை சிதருண்டு உயிர்துரந்திருப்பதைக்கண்டு வாய்விட்டலரினுன். என்செய்வது! வேறுவழியொன்றும் தோன்றவில்லை பின்பு சற்றுலோசித்து நம் பரமாசார்யாளையே சரணமடைந்து அதுமுதல் தன் இராஜ்ஜியத்திலுள்ள பிராமணர்களைக் கண்ணுங் கருத்துமாய்க் காப்பாற்றிவந்தான். தனக்கு ஹேமாசார்யரிடமிருந்த பக்தியின் காரணமாக ஜைனமதஸ்தர்களையும் அவர்களா

லயங்களையுங்கூட பாதுகாத்துவந்தான். எல்லாமறியவல்ல ஹேமாசார்யர் சங்கரரிடம் வாதத்தில்தான் தோல்வியடையநேரிடுமென்றும் நாம் நிலைநாட்டிய மதம் நம் கண்முன்னழிவதைப் பார்க்க நேரிடுமென்ற காரணமும்பற்றியே இவ்வாறு உயிர்துறந்தார். நம் பரமாசார்யரும் வேரிடம் விஜயத்திற்குச் சென்றனர்.

உண்மையையாலோசிக்கின் ஹேமாசார்யர்காலத்தில் இத் திருவிளையாடல் செய்தது ஆதிசங்கரரென்று கூறுவதற்கில்லை. ஹேமசந்திரர் காலமோ கி. பி. 1088முதல் கி. பி. 1173வரையில் நம் சங்கரரின் காலமோ மிக்கமுந்தியது ஆதலால் அவ்வாதிசங்கரரால் ஸ்தாபிக்கப்பட்ட பீடங்களிலமர்ந்த குருபரம்பரைகளில் ஒருவரென்று கொள்வதே உத்தமம். இதனால் அக்குருபீடங்களிலமர்ந்தோர் யாவரும் பூர்ணமாய் அச்சிவாம்சம் பெற்றவர் என்பது மெய்ப்பிக்கப்படுகிறது. சுபம்.

பண்டித. நீ. வைத்தினாதசாஸ்திரி.

சிருஷ்டி கர்த்தா.

சிருஷ்டிகர்த்தா ஆர்? அணுவன்று. ஏனெனில், அது ஒரு வஸ்துவுடன் கூடுதல், பிரிதல், என்ற விகாரமுடையது. அதனால் அது ஒரு சமயம் ஓரிடத்தும், மற்றோர் சமயம் மற்றோரிடத்தும், இருப்பதாகிறது. அதுவே அதன் ஜடத்தன்மையையும், அதனால் சுவாதீனமற்ற தன்மையையும், காட்டுகிறது. விகாரம் சுவாதீனமற்ற தன்மையென்பது வெளிப்படை. அதனால் ஆத்மதத்வ விஷயத்தில் நிர்ணயம் ஏற்படும் வரையில் சித்தவிகாரம் இருப்பதாகிறது. இவ்விதமாகத் தானே சுவாதீனமற்றதால், அணு எதற்கும் ஆதாரமாகவிருக்க இயலாது. விகாரமுடையதால்அது மாயா ஸ்வரூபமே.

தேகாதிகள் விகாரப்படுவதால் மாயாஸ்வரூபம். உற்பத்தியும் சப்த விகாரமும் இருப்பதால் ஆகாசமும், அங்ஙனமே ஆகிறது. ஆத்மாவின் ஒரு அம்சத்தில் மட்டும் இருப்பதாகச் சொல்லப்படுவதால் ஆகாசாதிகள் எவ்விதம் கொள்ளப்பட்டாலும் அங்ஙனமிருப்பதே ஒரு கூட்டில் அடையப்பட்ட கிளியைப்போல், சுவாதீனமற்ற தன்மையாகிறது. அதனால் ஆகாசாதிகள் தானாக

எதற்கும் ஆதாரமாகாது. வீடில்லாத ஒருவன் மற்றொருவனுக்கு இடம் கொடுக்க முடியாததுபோலவே.

அவ்யக்தமெனப்படும் மாயாசக்தியோவெனில், அதுவும்ஸங்கோசம் விகாஸம்முதலிய விகாரமுடையது. அதனால் ஒரு சமயம் இருந்தும் மற்றோர் ஸமயம் இல்லாமலுமிருப்பதாகிறது. அதனால் அது எதற்கும் ஆதாரம் ஆகாது இதனால் சிருஷ்டி கர்த்தா. ஸர்வ வியாபகனும் நித்யனுமாக இருக்கவேண்டு மென்றாகிறதல்லவா ?

இதனால் ஆத்மாவே கிருஷ்டிகர்த்தா. ஆகிலும் அவிகாரியானதால் அது எவ்விதம் அமைவதாகிறது ? நாடகசாலையில் பிரகாசிக்கும் தீபம் நாடகம் நிகழ்கையில் அதைத் தோற்றுவிக்கிறது ஆனால் அந்நிகழ்ச்சியில்லாத காலத்தும் தீபம் முன்போலவே பிரகாசித்துக்கொண்டே இருக்கிறது. இதனால் தீபம்போல் விகாரப்படாமலே, ஆத்மா மாயாப் பிரபஞ்சத்தை பிரகாசிவிப்பதாக உதாரணத்தால் விளங்கும். அதனால் ஆத்மாவே சிருஷ்டிகர்த்தா.

R. சுப்பிரமணிய அய்யர்.

பௌத்தமதம்.

ஆஸ்திகர்களே !

சென்றவாரத்தில் பௌத்தமதத்தை உபதேசம் செய்தபுத்த தேவரைப்பற்றிச் சிறிது கூறினோம். பாகவதம் முதலிய புராணங்களில் அவதார விசேஷமாகக் கொண்டாடப்படும் புத்த பகவானை ஸாதாரண புருஷனாகப் பாவிப்பது உசிதமன்று. அவதாரங்களுக்குள் உத்தம அவதாரமாகிய ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவின் கம்பீர வசனத்தை உற்றுநோக்குங்கள்

यद्यद्विभूतिमत्सत्त्वं श्रीमदूर्जितमेव वा ।
तत्तदेवावगच्छ त्वं मम तेजोंशसम्भवम् ॥

ஐசுவர்யமும், பலபராக்கிரமமும், உத்ஸாஹமும், காந்தியும், ஆகிய இவற்றுடன் எந்த வஸ்துக்கள் இவ்வுலகிலுளவோ அவையெல்லாம் என் தேஜஸ்ஸின் அம்சத்தாலுண்டானவை என்று அறிவாயாக. இதனால் அபார மஹிமை வாய்ந்த புத்ததேவரையும் நாம் பூஜிக்கலாம் என்று ஏற்படுகின்றதல்லாவா ? இப்படியிருப்பினும்

இவருடைய மதமனைத்தும் சிதறுண்டு போய்விட்டதற்கு புத்த தேவரின் உபதேசமொழிகளை விபரீதமாக அர்த்தம் செய்த புத்த சிஷ்யர்களின் புத்திதோஷமே காரணமாயிற்று. ஈண்டிது அறிய வேண்டியது. புத்த தேவருக்கு சிஷ்யர் நால்வர் இருந்தனர். ஸௌத்திராந்திகன், வைபாஷிகன், யோகாசாரன், மாத்யமிகன் என்னுமின்னால்வரால் பௌத்தமதம் உண்டாயிற்று. புத்ததேவருபதேசித்தருளிய உண்மை ஒரேவிதமாயிருப்பினும் இவருடைய இன்னான்கு சிஷ்யர்களாலேயே பௌத்தமதமும் நான்காகப் பிரிவையடைந்தது. தற்காலத்திலும் ஒரே ஆசார்யன் உபதேசித்த உண்மை ஏகரூபமாயினும் சிஷ்யர்களுக்குள் அபிப்பிராய பேதமேற்படுவது இல்லையா? அதுபோல் புத்தசிஷ்யர்களின் புத்திபேதத்தாலும் அதிகாரபேதத்தாலும் நான்காகப் பிறிந்தது யுக்தமேயாகும். இவ்வபிப்பிராயத்தையே போதிசித்தவிவரணமென்ற கிரந்தத்தில்

देशना लोकनाथानां सत्वाशयवशानुगाः ।
भिद्यन्ते बहुधा लोके उपायैर्बहुभिः पुनः ॥

என்று பௌத்தர்கள் ஸ்திரப்படுத்தியிருக்கிறார்கள். புத்ததேவருடைய நான்கு சிஷ்யர்களுக்குள் மாத்யமிகனென்பவரே மேலானவர், இவருக்குத்தான் புத்தபகவானினுபதேசத்தை உள்ளபடி அறிய ஸாமர்த்தியமும் சித்தபரிபாகமும் அமைந்திருந்தது. இக்காரணம்பற்றியே புத்தபகவானும் முக்கிய அதிகாரியாக மாத்திமிகனைக்கருதித் தமது பரமஸித்தாந்தரஹஸ்யமான சூன்யவாதத்தையுபதேசம்செய்தனர். இச்சூன்யவாதமே புத்தருக்குப் பிரியமானது. இரண்டாவது யோகாசாரனுக்கு சித்தம் அபரிபக்வமாயிருப்பதால் அமுக்கிய அதிகாரியாக அறிந்து அப்புத்தர் அச்சூன்யவாதத்தை உபதேசிக்கவில்லை. ஆனால் அச்சூன்யவாதத்தில் இவரது புத்திப்பிரவேசிக்கும்பொருட்டு விக்ஞானமாத்திரவாதத்தையுபதேசித்தார். அதாவது புத்தியாகிய ஞானமேதான் உலகில் காணப்படும் வஸ்துக்களாகப் புலப்படுகின்றது. ஞானத்தைத்தவிற வேறு வஸ்துக்களில்லை, சூன்யவாதிமதம்போல் சுத்த சூன்யமுமில்லை, ஆனால் விக்ஞானமே ஒன்றுதானுள்ளது. ஆத்மாவெனபதும் அது தான் இங்கு ஒரு சங்கை, விக்ஞானத்தை ஆத்மாவென்பது ஸரியல்ல, விக்ஞானமென்பது அறிவாகும்,

ஆத்மாவென்பது அறிந்துகொள்பவனுவான். ஆகவே அறிவே அறிகில் றவனுகிய ஆத்மாவாக அங்கீகரிப்பது அஸங்கதமன்றோ வெனின் இவர்கள்மதத்தில் விக்ஞானம் தன்னேயும் மற்றைய வஸ்துக்களேயும் அறிந்துகொள்ளும் சக்தி வாய்ந்திருப்பதாக ஒப்புக்கொண்டிருப்பதாலும், விக்ஞானத்தைத்தவிர வேறு வஸ்துக்களிலிருக்கும் விஷயத்தில் பிரமாணமில்லேயாதலாலும் விக்ஞானமே ஆத்மாவென்று ஸித்திக்கின்றது. மூன்றாவதுசிஷ்யனுகிய ஸௌத்ராந்திகனுக்கும், நான்காவதுசிஷ்யனுகிய வைபாஷிகனுக்கும் விக்ஞானத்தைக்காட்டிலும் வேறான பாஹ்யகடபடமுதலிய பதார்த்தங்களில் அபிநிவேசமதிகமாகவிருப்பதை ஆலோசித்து அப்புத்தபகவான் அவர்களபிப்பிராயத்துக்கிணங்க அந்த விக்ஞானத்தினும் வேரு பாஹ்யகடபடம் முதலிய அர்த்தங்களே அங்கீகரித்து ஸர்வசூன்யவாதத்தில் அவர்கள்புத்தி பிரவேசிக்கும் பொருட்டு பாஹ்யார்த்தவாதத்தை உபதேசித்தருளினர். இங்கு விக்ஞானத்தில்வேறாக பாஹ்யபதார்த்தம் உண்டென்னும்அம்சம் ஸௌத்ராந்திகனுக்கும் வைபாஷிகனுக்கும் ஸமானமேயாம். ஆனல் ஸௌத்ராந்திகன் பாஹ்யபதார்த்தத்தை அனுமானத்தால் அறியத்தக்கதென ஒப்புகின்றனன். பிரத்தியக்ஷமாக அறியத்தக்கதல்லவாம். வைபாஷிகனே பாஹ்யபதார்த்தத்தைப் பிரத்தியக்ஷமாகவறியலாம். அனுமானத்தால் அறியவேண்டியதில்லே என்று அங்கீகரிக்கின்றான். இதுதான் இவ்விருமதத்துக்கும் பரஸ்பரம் ஏற்பட்ட வித்யாஸம். இதுவரையில் இவ்வுலகமனேத்தும் க்ஷணிகமென்றபாவனுவிசேஷத்தாலும் இவ்வுலகமெல்லாம்சூன்யமென்ற பாவனேயாலும் சுத்தசூன்யஸ்திதியை அடையவேண்டியது என்பதுதான் பௌத்தமத பரமஸித்தாந்தம்" என்று நிரூபிக்கப்பட்டது. ஆதலால் முதலாவதாக சூன்னியவாதிமாத்திமிகரின் மதத்தை ஆராய்வோம்.

இவன் விக்ஞானத்தையும், பாஹ்ய பதார்த்தங்களேயும் அங்கீகரிப்பதில்லே. எல்லாம் க்ஷணிகம் என்ற பாவனேயாலும் ஸர்வமும் சூன்யமென்று நினேத்துக் கொள்வதாலும், தான் (ஆத்மா) சூன்யனுகவிருப்பதுதான் மோக்ஷம். சூன்யம் என்ற பதத்திற்கு விக்ஞானம், குடம், படம் முதலிய பதார்த்தங்களில்லாமலிருப்பது என்று பொருளேயன்றி சூன்யமென்று ஒரு

பொருளிப்பதாக சூன்யவாதி மதமன்று. இவன் மதமது சூன்ய வாதத்திற்குக் கூறும் யுக்தியாவது ஸுஷுப்தியினின்றும் விழித்தவனுக்கு "நான் ஸுஷுப்தியிலில்லை" என அனுபவம் ஏற்படுவதால் சூன்யமே ஆத்மாவாக சித்தித்து விடுகின்றது. இவ்வுலகமனைத்துங்கூட சூன்யவடிவம்தான். ஏனெனின் இவ்வுலகத்தில் எந்த வஸ்து முதலிலும், முடிவிலும் அஸத்தாகுமோ. அவ்வஸ்து இடையிலும் அஸத்துத்தான். ஸத்தாவதில்லை. இவ்வுலகமெல்லாம் உத்பத்திக்கு முன்னரும்; நாசத்துக்குப் பின்னரும், அஸத்தாவதால் இடையிலும் அஸத்தேயாம் இதனால் இவ்வுலகமெல்லாங்கூட சூன்யவடிவம்தானென்பது ஸித்தம். சாந்தோக்யோபநிஷத்தில் இவ்வுலகமெல்லாம் சூன்யமாகவிருந்தது என்று கூறியிருப்பதாலும், சூன்யவாதம் சாஸ்திரீயமேயாகும். ஆகையால் சூன்யமே பரமதத்துவம் என்று சூன்யவாதியின் அபிப்பிராயம். இந்த மாத்யமிகமதம் ஸரியன்று.

ஸுஷுப்தி காலத்தில் உண்டாகும் நான் இல்லை எனுமனுபவபலத்தால் ஸர்வமும் சூன்யந்தானென்பது பொருந்தாது. ஏனெனின் அவ்வனுபவம் பிரமாணஸித்தமில்லையாதலின் அப்பிராமாணிக அவ்வனுபவம் ஆத்மாவை சூன்யமாக ஸித்தாந்தம் செய்வதில் ஸாமர்த்தியமற்றது. பிரமஞானத்தால்உண்மையாகபதார்த்தம் எங்ஙனம் ஸித்திக்கும்? அல்லது அவ்வனுபவத்தைப் பிராமாணிகமாகவே ஒப்புக்கொண்டாலும் சூன்யவடிவாத்மா ஸித்திக்க முடியாது. ஏனெனின் "ஸுஷுப்தியில் நான் ஒன்றுமறியாதவனாகவிருந்தேன்" என்னுமிவ்வனுபவத்தால் எவனிடத்தில் ஸுஷுப்திகாலத்தில் அறியாமை இருந்ததோ? அப்படிப்பட்ட ஸத்ரூபமான ஆத்மா ஸித்திக்கின்றதே தவிர சூன்ய ரூபமாக ஆத்மா ஸித்திக்கமாட்டாது. தவிரஇவ்வுலகமனைத்தும்கூட அஸத்தென்ற சூன்யமவாதிமதமும் அஸங்கதம். ஏனெனின் இவ்வுலகமெல்லாம் அஸத்தென்றால் எங்ஙனம் மலடிமகன், முயற்கொம்பு முதலியவை பிரத்யக்ஷமாய் அறியப்படவில்லையோ அங்ஙனமே இவ்வுலகமும் பிரத்யக்ஷமாய் அறியப்படாமலல்வா இருக்கவேண்டும், பிரத்யக்ஷமாக அறியப்படுமிவ்வுலகத்தை எல்லாம் மலடிமைந்தனுக்கு ஸமமாக அஸத்தென்பது முற்றிலும் விருத்தமன்றோ.

தவிர தமது மதத்துக்கு சாந்தோக்யோபநிஷத்தை ஆதார மாக எடுத்துரைப்பதும் தவறு. சூன்யவாதி “இவ்வுலகமுத்பத்திக்கு முன் அஸத்தாயிருந்தது” என்னுமிச்சாந்தோக்ய சுருதியை தமது பக்ஷத்துக்கு ஸாதகமாக எடுத்துக்கொண்டால் அதற்குப் பிறகு அந்த சுருதியிலேயே “அஸத்தினின்றும் இவ்வுலகமுண்டாயிற்று” என்று கூறும் வசனத்தையும் பிரமாண மாகவும், தனக்கு ஸாதகமாகவும் எடுத்துக்கொள்ளவேண்டும். அதுவோ ஸரியாகாது எனெனின் அஸத்தாகிய காரணத்தினின் றும் காரியம் உத்பத்தியடைவதில்லை. அவ்விதமுண்டாகுமாயின் மலடி மகனிடத்திலிருந்தும் புத்திரன் உத்பத்தியடையவேண்டும் அங்ஙனம் காணப்படுவதில்லை. அன்றியும் சூன்யவடிவ அஸத்தை இவ்வுலகத்திற்கு உபாதானமாக ஒப்புக்கொண்டால் எங்ஙனம் கங்கணம், குண்டலம், முதலிய பூஷணங்களில் ஸுவர்ணம் ஸம்பந்தித்து சுவர்ணமயமாகவே புலப்படுகின்றதோ அங்ஙனமே குடம் முதலிய வஸ்துக்களிலும் அஸத்ஸம்பந்தித்து “குடம் அஸத் என்பதாக பிரதீதியுண்டாதல் வேண்டும். அப்படியுண் டாவதில்லை. ஆகவே சூன்யம் இவ்வுலகத்துக்குக் காரணமென் பது பொருந்தாது.

ஆனால் அஸத்தையே இவ்வுலகத்துக்குக் காரணமாகக்கூறிய சுருதியின் அபிப்பிராயமென்னவென்று விசாரிப்பது அவசிய மாகும். சுருதியை அப்பிரமாணமாகத் தள்ளிவிடுவது தவறாகு மன்றோ? இச்சுருதிக்கு இவ்வுலகத்துக்கு அஸத்தைக் காரண மாகக்கூறுவதில் தாத்பர்யமில்லை. அஸத்தைக் காரணமாக ஒப் புக்கொள்ளும் சூன்யவாதிமதத்தை அனுவாதம் செய்வதால் இச் சுருதி பூர்வபக்ஷவடிவந்தானாகும். இக்காரணத்தாலேயே இச் சுருதியின் ஆரம்பத்திலும் “சில சூன்யவாதிகள் அஸத்தையே உலகத்திற்குக் காரணமாக ஒப்புகின்றனர்” என்றும் கூறப்பட்டி ருக்கின்றது. அன்றியும் இச்சுருதியை பூர்வபக்ஷரூபமாக ஒப்பா விடின் அச்சுருதிவாக்கியத்தின் ஈற்றில் கூறப்பட்டுள்ள “அஸத்தி லிருந்து ஸத்கார்யம் உண்டாகமாட்டாது” என்று அஸத்திலிருந்து ஸத்கார்யவாதத்தை நிஷேதம்செய்த சுருதியும் அஸங்கதமாக முடிந்துவிடும். இதனாலும் இச்சுருதிஸித்தாந்தவடிவமன்றென்று நன்கு ஸித்திக்கின்றது. பௌத்தர்களுக்கு சுருதி பிரமாண மில்லையாதலின் தமது மதஸித்தியின்பொருட்டு சுருதியைப்பிரமா

ணமாக எடுத்துரைப்பது தகுதியற்றதாயினும் வேதத்தைப் பிரமாணமாக ஒப்புவோராகிய ஆஸ்திகர்களைத் தமது மதத்தில் சிரத்தை வைக்கும்படி செய்யும்பொருட்டு நாஸ்திகர்களாகிய பௌத்தர்களும் சுருதியை ஆதாரமாக எடுத்துக்காட்டுகின்றது யுக்தந்தான். நாமும் அவன் கூறும் சுருதியின் அர்த்தத்தை எடுத்துரைப்பதும் உசிதமேயாகும். இதுவரையில் பௌத்தர்களுக்குள் மிகச்சிரேஷ்டரென்று பிரஸித்தியுற்ற மாத்யமிக மதத்தை நிரூபித்தோம். இனி யோகாசாராது மதத்தை வர்ணிப்பாம். சுபம். சங்கரசிங்கரன்.

பக்தியோகம்.

(75-வது பக்கத்தொடர்ச்சி.)

வாசகர்களே!

சென்றவாரத்தில் ஸர்வேசுவானின் அவதாரங்களாகிய மஹாபுருஷர்களைப்பற்றிப் பேசினோம். இனி இவ்வாரத்தில் பகவானை உபாஸிப்பதற்கு மந்திரோச்சாரணம் எவ்விதமென்பதை சற்றுவிசாரிப்போம். பிரபஞ்சம் யாவும் நாமம் உருவமாகிய இருவிதமாகத் தோன்றுகின்றது என்று நமது சாஸ்திரங்களில் பிரஸித்தம். நாமரூபமின்றி எவ்வித அறிவும் எவனுக்குமுண்டாவதில்லை. இவ்வுலகமெல்லாமித்தன்மைத்தானென்பது நிச்சயமாயின் பிரும்மாவும் நாமத்தை முன்னிட்டுக்கொண்டே இப்பிரபஞ்சத்தையும் ஸிருஷ்டித்திருக்கவேண்டும். அதாவது ஹிரண்யகர்பர் முதலில் நாமமாகமாறி பிறகு பிரபஞ்சமாக மாறுகிறார் என்பது சாஸ்திர ரஹஸ்யம். மீண்டும் நாமமாகவே சேஷத்து நிற்கிறார். இந்த நாமரூபத்தையே சப்தார்த்த ரூபமாயும் கூறுவதுண்டு. ஆகவே நாமமே ஸகல உலகத்திற்கும் உபாதான காரணமாகும். இந்த நாமமென்பது ஸ்போடமென்னும் பதத்தாலும் வழங்கப்படுவதுண்டு. ஸ்போடத்துக்கும் பகவானுக்கும் வித்யாஸமில்லை என்று வையாகரண ஸித்தாந்தமாகும். ஓங்காரமென்னும் ஸ்போட சப்தத்தினின்றும் மற்ற சப்தங்களெல்லாம் தோன்றிற்று. ஆகையால் பிரணவமென்னும் ஓங்காரமொன்றுதான் இப்பிரபஞ்சமெல்லாவற்றிற்கும் காரணம்: சப்தமும், பொருளும். எப்போதும் பிரியாமலிருக்குமாதலின், இந்த ஓங்கார மந்திரத்தினின்றே உண்

டான இவ்வுலகத்தைப் பிரித்து பகுக்கமுடியாது. ஆகவே ஸ்மான்ய சப்தங்களைக்காட்டிலும் ஓங்காரத்துக்கு மகிமையதிகம். இதுவே தான் ஸர்வேசுவரனின் மிகப்பிரியமான நாமதேயமாகவும் சுருதிப் பிரஸித்தம். ஓங்கார மந்திரத்தால் பகவானை பணிவிடை செய்வதால் பகவான் சீக்கிரத்தில் பிரஸாதம் செய்கிறார் என்று யோகசாஸ்திரத்திலும் பிரஸித்தம். இக்காரணம்பற்றியே காயத்திரீமுதலிய மஹாமந்திரங்களைஓங்காரமின்றி ஜபிக்கலாகாது என தர்மசாஸ்திரங்கள் முறையிடுகின்றன. இந்த ஓங்காரம்போன்றபலமந்திரங்களும், பகவானை தரிசிப்பதற்காக மகரிஷிகள்ஞான திருஷ்டியால் கண்டுபிடித்திருக்கிறார்கள். அம்மந்திரங்களை உச்சரித்தும் பகவானைத் தியானிக்கலாம். இதுவுமன்றிபிரதீகமூலமாகவும் பகவானை உபாஸித்து க்ஷேமத்தையடையலாம். பிரதீகமூலமாக பகவானை உபாஸிப்பதாவது பிரும்ஹமில்லாத வஸ்துவினிடத்தில் பிரும்மமென்னும் புத்தியைச் செலுத்தி பக்தி செய்வது தான். இப்பிரதீகோபாஸனம் சுருதிகளில் "மனதை பிரும்ஹமாய்ப் பூஜை செய்" "ஆகாசத்தை பிரும்மமாக உபாஸனம் செய்" என்று பலவிதமாக சொல்லப்பட்டிருக்கின்றது. இதுபோல் "ஸாளக்கிராமச் சிலையை விஷ்ணுவாக உபாஸனம் செய்" என்றும் பலவித வாக்கியங்களுண்டு. ஸ்ரீபகவத்பாதாளும் "சுருதிகளை பரிசீலிக்குங்கால் சாஸ்திரஸித்தப் பிரதீகங்களையும் பகவானாக உபாஸிப்பதும் நலமே" என்று நிரூபித்துள்ளார். சுருதிகளில் சொல்லப்பட்டிருக்கும் பிரதீகத்தைத்தவிற வேறுசில பிரதீகங்கள் புராணங்களிலும், தந்திரசாஸ்திரங்களிலும் காணப்படுகின்றன.

பிரதீகமென்னும் பதத்துக்கு உபாஸ்யமான பிரும்மஹத்தினின்றும் வேறானதும் அனேக அம்சங்களில் பிரும்மஹத்தைப் போன்றதுமான பொருள் என்று பொருளாகும். பிரும்ஹத்தையறியும்பொருட்டு பிரதீகத்தை ஒரு பிரதிநிதியாக வைத்துக் கொண்டு பகவானிடம் பக்திபண்ணுவதுதான் உண்மையான பயனையளிக்கும். ஈசுவரனை உபாசிப்பதற்கு பிரதீகம் ஸாதகமாக இருப்பதுபோல் வேறு வஸ்துவில்லை. ஆனால் பிரதீகங்களையும் நாமாக தீர்மானித்துக்கொள்ள முடியாது. சாஸ்திரமூலமாகபிரதீகங்களை நிச்சயித்துக்கொண்டு பிறகு அவைகளில் பரமாத்மாவை உபாசித்தால் பிரும்ஹத்தை நேராக உபாஸிப்பதற்கு ஸமான

மாகும். தேவர்கள், பிகிருக்கள் முதலிய வேறு வஸ்துக்களேயும் பிரும்ஹமாக உபாஸிக்க வேண்டுமேயன்றி அவைகளேயே தெய்வமாகப் பூஜிப்பது சிற்றின்பத்தைத் தான் தருமேயன்றி பேரின்பத்தைத் தாராது. இக்கருத்துடன் தான் நமது சாஸ்திரங்களில் அற்பதேவதைகளையும், மகரிஷிகளேயும், பகவானுக்குஸமானமாக கொண்டாடி ஸ்தோத்திரம் செய்யப்பட்டிருக்கின்றது. ஸ்ரீ பகவத்பாதாளும் "ஆதித்யன் முதலிய தேவர்களே உபாஸிப்பவனுக்கும பயனையளிப்பது பரமாத்மாதான். பிரதிமைகளில்விஷ்ணு முதலியதேவர்களே உபாஸிப்பதுபோல் பிரதீகத்தில பிரும்ஹத்தை உபாஸிக்கவேண்டும்" என்று சொல்லியிருக்கிருர். பிரதீகத்தைப் பற்றின வசனங்களெல்லாம பிரதிமைககும ஸமானமேயாகும். விக்ரஹாராதனம் செய்வதாலும், பக்தியும முக்தியும் எளிதில ஸித்திககும் என்பது சாஸ்திர ஸித்தந்தான். இவ்வுலகில் விக்ரஹாராதனத்தை மஹம்மதியாகளும, கிறிஸ்தவர்களும்தான் அங்கிகரிப்பதில்லே மற்றவாகள் யாவரும சம்சயமின்றி ஒப்புக்கொண்டிருக்கிருர்கள். ஆகையால் பிரதிமையிலும் பகவானையுபாஸிப்பது சாஸ்திரீயமெனபதுதான் ஆஸ்திக ஸித்தாந்தம்.

இவ்விதம் பரமாத்மாவை உபாஸிப்பதற்கு மற்றும் பல ஸாதனங்களுண்டு. அதாவது விவேகம், காமக்ரோதாதிகளே வெல்வது, சித்த சுத்தி, ஸந்தியாவந்தனம முதலிய காமாக்களேச் செய்வது, அஹங்காரமில்லாமை, அஸூயையினமை, இவை முதலிய நற்குணங்களே ஸம்பாதித்துக் கொள்ளல் வேண்டும. அன்றியும தினந்தோறும் ஏகாந்தத்தில சித்தத்தையடககுவதற்குப்பிரயத்தினம் எடுத்துக்கொள்ளவேண்டும. பக்தியைப் பெறுவதற்கு முக்கிய ஸாதனங்களான இந்த நற்குணங்களே பக்தன் நனகு பெருக்கவேண்டும். இஹபாசுகத்தை அனுபவிப்பதற்காகிய காமய கர்மங்களே விட்டுவிட வேண்டும். கர்மாக்களேப் பயனேக்கருதாது செய்யவேண்டும். இந்திரியங்களே விஷயங்களில்புகாமல் நிறுத்தி நம் எண்ணப்படி அவைகளே நடத்தவேண்டும். பக்தியென்னும் கட்டிடத்திற்கு இவைகள்தான் அஸ்திவாரமாகையால் அடுத்த வாரத்தில் இதனேயே விசேஷமாய் விசாரிப்பாம்.

V. ஜகதீசுவரசாஸ்திரிகள்.